விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 4 வெள்ளி 20.08.2021 மலர் - 2, இதழ் - 136

# உள்ளூர் தலிபான் ஆதரவாளர்கள்



விஜயபாரதம்

முஸ்லிம்களின் ஷரியத் சட்டப்படி ஆட்சி நடத்துவோம் என கூறுகின்றனர் தலிபான் முஸ்லிம்கள். பெண்களுக்கு உரிமை, கல்வி, அரசு ஊழியர்களுக்கு பொதுமன்னிப்பு என ஏராளமான சலுகைகளை வாரி வழங்குகின்றனர். ஆனால் அவற்றை நம்பாமல், உயிருக்கு பயந்து அங்கிருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறுவதும் அதே முஸ்லிம்கள்தான். அவர்களுக்கு அருகில் உள்ள சக முஸ்லிம் நாடுகளே அடைக்கலம் தருவதில்லை. இந்த விசித்திர சூழலில் நமது பாரதத்தில் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக தலிபான் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக குரல்கள் எழுகின்றன என்பது அதைவிட விசித்திரம். நாம் தமிழர் கட்சியின் சீமான், இயக்குனர் அமீர் ஆகியோர் தலிபான்களை பயங்கரவாதிகள் என்று கூறக்கூடாது அவர்கள் போராளிகள் என அழைக்கப்பட வேண்டும் என்று பேசியுள்ளனர். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை கொள்கை பரப்பு செயலாளர் உமர் அக்தர் தனது டுவிட்டர் பதிவில், '20 ஆண்டு கால யுத்தம் நிறைவு பெற்றது. தலிபான்கள் மீண்டும் ஆட்சி அமைக்கிறார்கள். மண்டியிடாத மானம், வீழ்ந்து விடாத வீரம் வெற்றிகொண்டது' என தலிபான் பயங்கரவாதிகளை புகழ்ந்துள்ளார். இங்குள்ள காட்சி ஊடகங்களோ இவர்களுக்கு மேலாக தலிபான்களை புகழ்கின்றன. அவை, தலிபான்கள் மிகப்பெரிய சாதனை படைத்து விட்டதாகவும் அசால்டாக ஆப்கனை கைப்பற்றிவிட்டதாகவும் புகழ்ந்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இதைத்தவிர, அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியத்தின் செயலாளர் மவுலானா உம்ரைன் மஹ்ஃபுஸ் ரஹ்மானி, சமாஜ்வாதி கட்சி எம்பி ஷபிகுர் ரஹ்மான் பர்க், முனாவர் ராணா, ஒருசில முஸ்லிம் அமைப்பினர் என பலரும் தலிபான்களுக்கு ஆதரவு தெரிவித்து வருவது, நமது நாடு எதனை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது என்ற அச்சத்தை விதைக்கிறது.

# கருப்பர் கூட்டம் மிரட்டல்



விஜயபாரதம்

ஹிந்து மதத்தையும் கந்தசஷ்டி கவசம், முருகன் உள்ளிட்ட ஹிந்து கடவுள்களையும் தொடர்ந்து அவமதித்து யூடியூப் வலைதளத்தில் வீடியோ பதிவிட்டதற்காக கைது செய்யப்பட்டு கடந்த 8 மாதங்களாக சிறையில் அடைக்கப்பட்டார் கருப்பர் கூட்டத்தை சேர்ந்த சுரேந்தர். தி.மு.க ஆட்சிக்கு வந்த நிலையில் இவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். சிறையிலிருந்து வெளியே வந்வுடன், இனியும் தொடர்ந்து ஹிந்து கடவுள்களை ஆபாசமாக சித்தரித்து வீடியோ வெளியிடப்போவதாக தெரிவித்துள்ளார். இது, ஹிந்துக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கருப்பர் கூட்டத்தினை சேர்ந்தவர்கள் அனைவரும் பெரியாரியவாதிகள், கம்யூனிசவாதிகள், தி.மு. கவினராகவே இருக்கின்றனர். எனவே, தற்போது தமிழகத்தை ஆளும் தி.மு.க தலைமையிலான அரசு, இவர்கள் மீது உரிய நடவடிக்கையை எடுக்குமா, அவர்களுக்கு ஆதரவளிக்குமா அல்லது ஆடவிட்டு வேடிக்கை பார்க்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# கோவையில் தலிபான் ஆதரவினரா?




விஜயபாரதம்

தலிபான்கள் ஆப்கானை கைப்பற்றியதையடுத்து அதனை நமது பாரதத்தில் சில முஸ்லிம்கள் சமூக வலைதளங்களில் கொண்டாடி வருகின்றனர். குறிப்பக, தமிழகத்திலும் தலிபான்களுக்கு ஆதரவாக சிலர் கருத்துக்களை பதிவு செய்து வருகின்றனர். இது குறித்து உளவுத்துறை விசாரித்து வருகிறது. தேசிய புலனாய்வு முகமையும் விசாரணை மேற்கோண்டு வருகிறது. கோவையில் ஏற்கனவே ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்தவர்களின் வீடு உள்ளிட்ட ஐந்துக்கும் மேற்பட்ட இடங்களில் என்.ஐ.ஏ அதிகாரிகள் சோதனை செய்து லேப்டாப், சி.டி உள்ளிட்ட பல முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர், சிலர் கைது செய்யப்பட்டனர். கேரளாவிலும் பயங்கரவாத இயக்கங்களை சேர்ந்த சிலர் சமீபத்தில் கைது செய்யப்பட்டனர். கனகமலை பகுதியில், ஆறு ஐ.எஸ்., ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக கோவையில் சோதனையிட்டு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இதனால், தற்போது கோவை சுற்றுவட்டாரப் பகுதிகள், கேரளாவின் சில பகுதிகளில் உள்ள நபர்களின் சமூகவலைதள கணக்குகள், நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# செம்மரக்கடத்தல் சர்வதேச கடத்தல்



விஜயபாரதம்

திருப்பதியில் நடைபெற்ற பா.ஜ.கவின் மக்கள் ஆசீர்வாத யாத்திரையில் கலந்துகொண்ட மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி, திருப்பதி சென்று ஏழுமலையானை வழிபட்டார். பின்னர் கோவிலுக்கு வெளியே செய்தியாளர்களுடன் பேசிய அவர், 'செம்மரக்கடத்தல் சர்வதேச கடத்தல் விவகாரமாக மாறியுள்ளது. எனவே இதனை தடுத்து நிறுத்த, மாநில அரசு மத்திய அரசின் ஒத்துழைப்பை பெற வேண்டும். திருப்பதி அருகே குன்றின் மீது அமைந்துள்ள, சேதப்படுத்தப்பட்ட ஏழுமலையானின் தாயார் வகுளா தேவியின் கோவிலை புனர்நிர்மாணம் செய்ய வேண்டுமென்று பல ஆண்டுகளாக நாங்கள் கோரிக்கை வைத்தோம். தற்போது தேவஸ்தான நிர்வாகம் அக்கோவிலை புனர்நிர்மாணம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. தேவஸ்தானம் செய்திருக்கும் பணிகளில் இது மிக சிறந்ததாக நான் கருதுகிறேன்' என்று கூறினார்.

# தமிழ் கல்வெட்டுகல் அரசுக்கு உத்தரவு



விஜயபாரதம்

மதுரையை சேர்ந்த மணிமாறன் என்பவர் உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அதில், 'பழங்கால வரலாற்றுக்கு ஆதாரமான பெரும்பாலான தகவல்கள் கல்வெட்டுக்களில் இருந்து தான் கிடைக்கின்றன. அதன் முக்கியத்துவதை உணர்ந்தே 1961ல் கல்வெட்டியல் துறை ஏற்படுத்தபட்டது. பல்வேறு காலகட்டங்களில் கிடைத்துள்ள சுமார் ஒரு லட்சம் கல்வெட்டுகளில், 65 ஆயிரம் கல்வெட்டுகள் தமிழோடு தொடர்புடையவை. இந்நிலையில், மைசூர் கல்வெட்டியல் துறையில் உள்ள தமிழ்மொழி தொடர்பான கல்வெட்டுக்களை தமிழக கல்வெட்டியல் துறையிடம் ஒப்படைக்கவும், அவற்றை சட்டப்படி நவீன முறையில் பாதுகாக்கவும் உத்தரவிட வேண்டும்' என்று கூறியிருந்தார். இதனை விசாரித்த நீதிபதிகள், சென்னையில் உள்ள தொல்லியல்துறையின் கல்வெட்டியல் கிளையை தமிழ் கல்வெட்டியல் துறை என பெயர்மாற்றம் செய்ய வேண்டும். 6 மாதத்திற்குள் சென்னையிலுள்ள தமிழ் கல்வெட்டியல் கிளைக்கு, மைசூரிலுள்ள தமிழ் கல்வெட்டுக்கள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் இடமாற்றம் செய்ய வேண்டும். அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தமிழக அரசு 6 மாதத்திற்குள்ளாக செய்துத்தர வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

# மூடப்பட்ட கோவில் திறப்பு



விஜயபாரதம்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி கும்மங்குளம் ஊரில் மக்கள் பல ஆண்டுகளாக வழிபட்டு வரும் முருகன் கோவில் கிறிஸ்தவர்கள் தூண்டுதலினால், தாசில்தார் உத்தரவின் பேரில் மூடப்பட்டது. இதனை அறிந்த இந்து முன்னணி போராட்டத்தில் இறங்கியது. இதனையடுத்து கோவில் பக்தர்களுக்காக மீண்டும் திறக்கப்பட்டது.

# விமானி டாக்ஸி



விஜயபாரதம்

பெங்களூருவில் உள்ள ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனம், பாரதத்தின் 75வது ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஹிந்துஸ்தான் 228 (விடி – கே.என்.ஆர்) விமானத்தின் நில ஓட்டம், குறைந்த வேக ஓட்ட சோதனைகளை (எல்.எஸ்.டி.டி) வெற்றிகரமாக நடத்தியுள்ளது. ஹிந்துஸ்தான் 228 என்பது வி.ஐ.பி போக்குவரத்து, பயணிகள் போக்குவரத்து, விமான ஆம்புலன்ஸ், பாரா ஜம்பிங், வான்வழி கண்காணிப்பு, புகைப்படம் எடுத்தல், சரக்கு பயன்பாடுகள் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்காக உருவாக்கப்பட்ட 19 இருக்கைகள் கொண்ட பலவகை பயன்பாட்டு விமானமாகும். ‘இது பாரதத்தின் முதல் சிவில் விமானத்திற்கான மைல்கல். பிராந்திய விமான இணைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கியப் படி. தனியார் விமான ஆபரேட்டர்கள், மாநில அரசுகள் இதனை தங்கள் உள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான இணைப்பு, பயிற்சி, பராமரிப்பு, தளவாட போக்குவரத்து என பலவகைகளில் பயன்படுத்த முடியும்.’ என்று எச்.ஏ.எல் துணைக்கருவிகள் வளாகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சஜல் பிரகாஷ் கூறினார்.

# தாலிபான்களுக்கு எதிராக நார்தர்ன் அலயன்ஸ்

தாலிபன்கள் ஆப்கனை முழுவதும் கைப்பற்றியுள்ள நிலையில், மறைந்த ஆப்கன் அரசியல்வாதி அகமது ஷாமசூத்தின் மகன் அகமது மசூச் தலைமையில் புதிய தலிபான் எதிர்ப்பு படை பாஞ்சீர் பகுதியில் உருவாக்கப்பட்டுள்ளது. நார்தர்ன் அலயன்ஸ் எனப்படும் அந்த படையின் கொடி பாஞ்சீர் பகுதியில் 2001க்கு பிறகு தற்போது மீண்டும் பறக்கவிடப்பட்டுள்ளது. அகமது மசூச் தற்போது தலிபான்களுக்கு எதிராக போராட, ஆப்கனின் சுதந்திர போராட்டத்தில் இணைய மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். பல பகுதிகளில் மறைந்துள்ள ஆப்கன் ராணுவ வீரர்கள் பாஞ்சீர் பகுதிக்கு சிறிது சிறிதாக செல்கின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளது.



விஜயபாரதம்

# பாமாயில் உற்பத்திக்கு நிதி



விஜயபாரதம்

நம் நாட்டில் ஆண்டுக்கு சுமார் 7,300 கோடி ரூபாய் மதிப்பிலான 1.5 கோடி டன் சமையல் எண்ணெய் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. மொத்த எண்ணை இறக்குமதியில் பாமாயிலின் அளவு 55 சதவீதம். பெரும்பாலும் இது இந்தோனேஷியா, மலேஷியாவில் இருந்து இறக்குமதியாகிறது. இதைத்தவிர, பிரேசில், அர்ஜென்டினாவில் இருந்து சோயா எண்ணெய், ரஷ்யா, உக்ரைனில் இருந்து சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதியாகிறது. தற்போது, உள்நாட்டிலேயே பாமாயில் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், எண்ணைப் பனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நிதி உதவி, பல்வேறு சலுகைகள் அளிக்கப்படும். பிரதமர் மோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில், இந்த திட்டத்துக்கு, 11 ஆயிரத்து 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. வரும் 2025 26க்குள், 11 லட்சம் டன்னாக உள்நாட்டு பாமாயில் உற்பத்தியை உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# மமதாவுக்கு கட்டம் சரியில்லை



விஜயபாரதம்

மேற்கு வங்கத்தில் தேர்தலுக்கு பிறகு நடைபெற்ற வன்முறைகளை சி.பி.ஐ விசாரித்து 6 வாரத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய கொல்கத்தா உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், கொல்கத்தா பேட்சை சார்ந்த அதிகாரிகளை கொண்ட சிறப்புப் புலனாய்வு குழு (எஸ்.ஐ.டி) விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது. எஸ்.ஐ.டி விசாரணை என்பது நீதிமன்றமே தலைமை ஏற்று வழிநடத்தும் புலனாய்வு விசாரணை. இதில் மத்திய மாநில அரசுகள் தலையிட முடியாது. கொல்கத்தா உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை ஏற்க முடியாது. உச்ச நீதிமன்றம் செல்வோம் என்று திருணாமுல் காங்கிரஸ் கூறி இருக்கிறது. மேற்கு வங்கத்தில் தேர்தலுக்குப் பிறகு நடைபெற்ற வன்முறைகளினால் மமதா பானர்ஜியின் ஆட்சிக்கு கண்டம் ஒரு பக்கம் என்றால் மற்றொரு பக்கம் தேர்தலில் தோற்றதால், தற்காலிக முதல்வராக மட்டுமே பதவியேற்றுள்ளார் மமதா. எம்.எல்.ஏ பதவியில் இல்லாத மமதா, வரும் அக்டோபர் மாதத்திற்கு பிறகு முதல்வராக தொடர முடியுமா எனும் கேள்வியும் எழுந்துள்ளது. காரணம், கொரோனா பிரச்சனையால் தற்போதைக்கு தேர்தலை நடத்தமுடியாது என தேர்தல் ஆணையம் கூறிவிட்டது. இது குறித்து மமதா போட்ட வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணையை நவம்பருக்கு ஒத்திவைத்துள்ளது நீதிமன்றம். எனவே, தற்போது மமதா பானர்ஜியின் முதல்வர் பதவியே அந்தரத்தில் தொங்குகிறது. இந்நிலையில் அவர் பிரதமர் பதவிக்கு ஆசைப்படுவது சிரிப்பைத்தான் வரவழைக்கிறது என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

# வங்கி லாக்கருக்கு புதிய விதிமுறை



விஜயபாரதம்

வங்கிகளில் பாதுகாப்பு பெட்டகம் எனப்படும் லாக்கர் வசதியை பயன்படுத்துவது தொடர்பாக ரிசர்வ் வங்கி புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது. இந்த புதிய விதிமுறைகள் 2022 ஜனவரி,1 முதல் அமலுக்கு வருகிறது. அதன்படி, 'வாடிக்கையாளரின் பொருட்களில் வங்கி ஊழியர்களால் மோசடி, வங்கியின் கவனக்குறைவு, தீ விபத்து, வங்கி கட்டடம் இடிந்து விழுந்து பாதுகாப்பு பெட்டகம் சேதம் உள்ளிட்டவை நடக்கும் பட்சத்தில் ஓராண்டு வாடகையை போல 100 மடங்கு தொகையை வாடிக்கையாளருக்கு இழப்பீடாக வங்கி வழங்க வேண்டும். ஆனால், நில நடுக்கம், வெள்ளம், மின்னல், புயல் போன்ற இயற்கைச் சீற்றத்திலோ, வாடிக்கையாளரின் அலட்சியத்திலோ பாதுகாப்பு பெட்டகப் பொருட்களுக்கு ஏற்படும் சேதத்திற்கு வங்கி பொறுப்பேற்காது. பாதுகாப்பு பெட்டக வாடகைக்கு மூன்று ஆண்டுகளுக்கான குறித்த கால வைப்பு நிதியை வங்கிகள் ஏற்கலாம். இது தற்போது பாதுகாப்பு பெட்டகத்தை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு பொருந்தாது. தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பாதுகாப்பு பெட்டக வாடகையை வாடிக்கையாளர் செலுத்த தவறினால் அந்த பெட்டகத்தை உடைக்க வங்கிகளுக்கு அதிகாரம் உள்ளது. பாதுகாப்பு பெட்டகத்தில் சட்டப்புறம்பான, அபாயகரமான பொருட்களை வைக்கக் கூடாது என்ற விதிமுறையை ஒப்பந்தத்தில் இணைக்க வேண்டும். கிளை வாரியாக காலியாக உள்ள பாதுகாப்பு பெட்டகங்கள் குறித்த விபரங்களை வங்கிகள் வெளிப்படையாக இணையதளத்தில் வெளியிட வேண்டும்' என்பது போன்ற விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

# நேதாஜி அஸ்தி உண்மையா?



விஜயபாரதம்

சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், 1945ல் விமான விபத்தில் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. அவரது மரணம் தொடர்பான மர்மங்கள் இன்னமும் விலகாமல் நீடிக்கின்றன. நேதாஜியின் அஸ்தி, ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலுள்ள ரெங்கோஜி புத்தர் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஜெர்மனியில் வசிக்கும் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் பேரன் சூர்ய குமார் போஸ், ஜப்பானில் ரெங்கோஜி கோவிலில் வைக்கப்பட்டுள்ள நேதாஜி சுபாஷ் சந்திர போசின் அஸ்தியை, மரபணு சோதனை நடத்தி, அது அவரது அஸ்திதானா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அஸ்தியிலுள்ள எலும்புகள் இன்னும் சேதமடையாத நிலையில் இருக்கின்றன. எனவே அதை மரபணு சோதனைக்கு உட்படுத்தமுடியும் என நம்புகிறேன் என கோரிக்கை விடுத்துள்ளார்.

# பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி



விஜயபாரதம்

காஷ்மீரில் கல்வி ஆலோசனை நிறுவனங்களில் பணிபுரியும் ஹூரியத் தலைவர்கள் உட்பட பலர் பாகிஸ்தான் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் எம்.பி.பி.எஸ், பொறியியல் படிப்பு உள்ளிட்ட கல்விகளை பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு நிறுவனத்துடன் சேர்ந்து விற்பனை செய்து அதில் கிடைக்கும் நிதியின் ஒருபகுதியை பயங்கரவாத செயல்களுக்கு நிதியுதவி செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு மருத்துவ சீட்டுக்கு ரூ.12 லட்சம்வரை பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஹூரியத் தலைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் 40 எம்.பி.பி.எஸ் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது ஆண்டுக்கு சுமார் 4 கோடி ரூபாய் பணம் இதில் அவர்களுக்கு கிடைத்துள்ளது. இதற்கான வங்கி ரசீது உள்ளிட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அந்த நிதியில் ஒருபகுதியை பயங்கரவாதம் சதித்திட்டங்களுக்கு பயன்படுத்திய ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இந்த விசாரணையில், முகமது அக்பர் பட், பாத்திமா ஷா, முகமது அப்துல்லா ஷா, சப்சார் அகமது ஷேக் ஆகியோர், சட்டவிரோத செயல்கள் தடுப்பு, பணப்பரிமாற்ற தடுப்புச் சட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் சி.ஐ.டி பிரிவு காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

# உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை



விஜயபாரதம்

தொழில் துறையினருக்காக மத்திய அரசு வெளியிட்ட உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (பி.எல்.ஐ) குறித்த சில சந்தேகங்கள் தொழில்துறையினரால் கேட்கப்பட்டன. அதற்கான விளக்கத்தை உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (டி.பி.ஐ.ஐ.டி) தற்போது வெளியிட்டுள்ளது. அதன்படி, வெள்ளைப் பொருட்கள் என பொதுவாக அழைக்கப்படும் எல்.ஈ.டி விளக்குகள், பிரிட்ஜ், ஏசி, வாஷிங் மெஷின் உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்யும் தொழில்துறையினருக்கு மத்திய அரசு தரும் உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகையை பெற அவர்கள் முழு அர்ப்பணிப்பு அவர்களுடைய முதலீட்டை செய்ய வேண்டும். அப்படி செய்யத் தவறினால் அல்லது இடையில் வெளியேறினால், அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்கத்தொகையை வட்டியுடன் திருப்பித் தர வேண்டும் என்று தெளிவுபடுத்தியுள்ளது. மேலும், விண்ணப்பதாரர், முதலீடு, நிகர அதிகரிப்பு விற்பனையின் அளவுகோல்களை பூர்த்தி செய்யாத அந்த குறிப்பிட்ட நிதியாண்டுக்கான ஊக்கத்தொகையை அவர் பெற தகுதியற்றவராக்க் கருதப்படுவார். இருப்பினும், விண்ணப்பதாரர் அதற்கடுத்த வருடங்களில் மீண்டும் ஊக்கத் தொகைகளைக் கோருவதற்கு எந்த தடையும் விதிக்கப்படாது. என்றும் துறை தெளிவுபடுத்தியது.

# பாகிஸ்தான் தூதரகத்தில் பா.ஜ.க. ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தான் லாகூர் கோட்டையில் உள்ள சீக்கிய பேரரசர் ரஞ்சித் சிங்கின் சிலை சில நாட்களுக்கு முன் உடைக்கப்பட்டது. அதைக் கண்டித்து பா.ஜ.க. சார்பில் டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது பேசிய டெல்லி பா.ஜ.க. தலைவர் ஆதேஷ் குப்தா, 'பாகிஸ்தானில் நடைபெற்றிருக்கும் பேரரசர் ரஞ்சித் சிங் சிலை உடைப்பு சம்பவம், அவர்களின் தலிபான் மனநிலையையே வெளிப்படுத்தியுள்ளது. அதை நாங்கள் அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம். பாகிஸ்தானின் இந்த மனோபாவம் தொடர்ந்தால், அந்த நாட்டின் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர், விரைவில் பாரதத்தின் அங்கமாகும்' என்ற கூறினார். இந்த போராட்டத்தையொட்டி டெல்லி பாகிஸ்தான் தூதரகம் முன்பு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.



விஜயபாரதம்

# டிக்டாக்கிற்கு தடை விதிக்க கோரிக்கை

பாகிஸ்தா சீனாவின் டிக்டாக், வீ சாட் செயலிகள் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு, இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கூறி அவற்றிற்கு தடை விதித்தார் முன்னாள் அதிபர் டிரம்ப். இதனை எதிர்த்து டிக்டாக் சார்பில் தொடரப்பட்ட வழக்கினால் டிரம்பின் தடை உத்தரவை நீதிமன்றம் ரத்து செய்தது. இந்நிலையில் டிக்டாக் செயலியின் தாய் நிறுவனமான பைட்டான்ஸ் நிறுவனத்தின் பங்குகளை சீன அரசு வாங்கியிருப்பதால் உடனடியாக டிக்டாக் செயலிக்கு தடை விதிக்க வேண்டுமென குடியரசு கட்சியை சேர்ந்த செனட் சபை உறுப்பினர் மார்கோ ரூபியோ ஜோ பைடனை வலியுறுத்தியுள்ளார். அவரது டுவிட்டர் பதிவில், 'டிக்டாக்கில் சீன கம்யூனிஸ்டு கட்சிக்கு தொடர்பில்லை என்று பைடன் இனி பாசாங்கு செய்ய முடியாது. அது அமெரிக்க பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. எனவே அந்த செயலியை உடனடியாக தடை செய்ய வேண்டும்' என கோரியுள்ளார்.

விஜயபாரதம்



# பாகிஸ்தான் பெண் மானபங்கம்



விஜயபாரதம்

ஏராளமான பின்தொடர்பவர்களைக் கொண்ட பாகிஸ்தானை சேர்ந்த பெண் டிக்டாக் பிரபலம் ஒருவர், கடந்த 14ம் தேதி பாகிஸ்தான் சுதந்திர தினக் கொண்டாட்டத்தைப் படம்பிடிக்க தனது நண்பர்களுடன் மினார் இ பாகிஸ்தான் பகுதிக்கு சென்றுகொண்டிருந்தார். லாகூரின் இக்பால் பார்க் அருகே அவரை நூற்றுக் கணக்கானவர்கள் சூழ்ந்து கொண்டனர். அந்த பெண் தப்பிக்க ஓடினார். ஆனால், அந்தக் கும்பல் அவர் உடைகளை கிழிப்பது, தள்ளுவது, மேலே தூக்கி வீசுவது என அநாகரீகமாக நடந்துகொண்டது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானது. பலர் இச்சம்பவத்தை கண்டித்தனர். அந்த பெண் லாகூர் லாரிஅட்டா காவல்நிலையத்தில் இது குறித்து புகார் அளித்தார். அதில் 400 பேர் கொண்ட கும்பல் தன்னையும் தன் நண்பர்களையும் கடுமையாகத் தாக்கியதாகவும், உடைகளை கிழித்து இழுத்துச் சென்றதாகவும், அணிந்திருந்த நகைகளையும் நண்பரின் செல்போன், 15 ஆயிரத்தை பறித்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

---




விஜயபாரதம்

# நான் பணம் எடுத்துச் செல்லவில்லை

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தலீபான் பயங்கரவாதிகள் நுழைந்ததும் அந்நாட்டு அதிபர் அஷ்ரப் கனி தனது குடும்பத்துடன் நாட்டை விட்டு தப்பி ஓடினார். அவர் தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் தஞ்சமடைந்துள்ளார். அவர் 4 கார்களில் கொண்டு வரப்பட்ட பணத்தை ஹெலிகாப்டரில் திணித்து எடுத்து சென்றார் என ரஷிய செய்தி நிறுவனம் ஒன்று தகவல் தெரிவித்து இருந்தது. ஆனால், சமூகவலைதளத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்ட அஷ்ரப் கனி, 'உள்ளூர் மொழி பேசத் தெரியாதவர்கள் மாளிகைக்குள் என்னை தேடினர். எனது காலணிகளை கூட அணிய முடியாத சூழ்நிலையில் நான் வெளியேற்றப்பட்டேன். தலீபானுக்கு அதிகாரத்தை அமைதியாக மாற்ற விரும்பினேன் ஆனால் விருப்பத்திற்கு மாறாக ஆப்கனிலிருந்து வெளியேற்றப்பட்டேன். நான் பணம் கொண்டுவந்ததாக கூறப்படும் வதந்திகள் முற்றிலும் ஆதாரமற்றவை. நான் மீண்டும் ஆப்கானிஸ்தான் திரும்புவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன்' என்றார்.

# துவங்கியது தலிபான்களின் ஆட்சி



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானை தலிபான் பயங்கரவாதிகள் கைப்பற்றி ஆட்சியமைக்க ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். இந்நிலையில், ஜலாலாபாத் நகரின் சாலைகளில் ஆப்கன் தேசிய கொடியுடன் பொது மக்கள் போராட்டம் நடத்தினர். அப்போது, அங்கு வந்த தலிபான்கள் அவர்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். பத்திரிகையாளர்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. ஆப்கானிஸ்தான் விமானப்படையின் பெண் விமானி சஃபியா ஃபிரோசியை தலிபான்கள் கல்லால் அடித்துக் கொன்றுள்ளனர். ஹசாராத் இன மக்களின் தலைவராக இருந்த அப்துல் அலி மசாரியை கடந்த 1995ல் தலிபான்கள் தூக்கிலிட்டு கொன்றனர். அவரின் நினைவாக மிகப்பெரிய சிலையை பாமியான் நகரில் மக்கள் நிறுவினர். தற்போது அவரின் சிலையை தலிபான்கள் தகர்த்துவிட்டனர். பெண்கள் பள்ளிக்கு செல்லலாம், அலுவலகங்களுக்கு செல்லலாம் என கூறி ஆச்சரியத்தை ஏற்படுத்திய தலிபான்கள் தற்போது சாகர்ஹிந்த் மாவட்ட கவர்னராக இருந்த சலீமா மசாரியை கடத்தியுள்ளனர். தாங்கள் ஆச்சரியமாக சுற்றிப்பார்த்த விளையாடிய பொழுதுபோக்கு பூங்கா, தீம் பார்க்கை மறுநாளே தீயிட்டு கொளுத்திவிட்டனர். இப்படியாக அனைவரும் எதிர்பார்த்தபடியே தலிபான்களின் ஆட்சி ஆப்கனில் துவங்கியுள்ளது.

# வலையில் சிக்கிய மீம்கள்



## உயர்த்தப்பட்ட அபராத தொகை சென்னையில் அமலுக்கு வந்தது

சென்னை, ஆக. 15–

[illegible]

| விதிமீறல் வகைகள் | பழைய அபராதம் ரூபாயில் | புதிய அபராதம் ரூபாயில் |
|---|---|---|
| பொது அபராதம் | 100 | 500 |
| போலீஸ் உத்தரவை மீறுதல் | 500 | 2,000 |
| உரிமம் இன்றி வாகனம் ஓட்டுதல் | 1,000 | 5,000 |
| தகுதியில்லாத வாகனம் ஓட்டுதல் | 500 | 10,000 |
| அதிவேகமாக வாகனம் ஓட்டுதல் | 400 | 2,000 |
| ஆபத்தாக வாகனத்தை ஓட்டுதல் | 1,000 | 5000 |
| போதையில் வாகனம் ஓட்டுதல் | 2,000 | 10,000 |
| ரேஸில் ஈடுபடுதல் | 500 | 5,000 |
| பர்மிட் இல்லாத வாகனம் | 5,000 | 10,000 |
| அதிக பாரம் ஏற்றுதல் | 2,000 | 20,000 |
| அதிகளவில் பயணிகளை ஏற்றுதல் | இல்லை | 1,000 |
| சீட் பெல்ட் | 100 | 1,000 |
| டூ – வீலரில் மூவர் சென்றால் | 100 | 1,000 |
| ஹெல்மெட் அணியாதது | 100 | 1,000 |
| காப்பீடு இல்லாத வாகனம் | 1,000 | 2,000 |
| சிறார் வாகனம் ஓட்டினால் | இல்லை | 25,000 |

DINAMALAR



சிவன் சொத்து குல நாசம்



கஜினி முகம்மது சிவன்
கோயிலை கொள்ளையடித்து
ஆப்கானிஸ்தானை சொர்க்கமாக
மாற்றினான் .. !!
இன்று அந்த நாடு நரகமாக
உள்ளது சிவன் சொத்து
குலநாசம் .. !!



# மாற்று ஆற்றலே மகத்தானது



விஜயபாரதம்

'அக்ஷய் உர்ஜா திவாஸ்' என்பது பாரதத்தில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் வளர்ச்சியைப் பற்றிய விழிப்புணர்வு பிரச்சார தினமாக கடந்த 2004 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20 அன்று கொண்டாடப்படுகிறது.

பூமி இயக்கம் உட்பட அனைத்து இயக்கங்களுக்கும் ஆற்றலே பிரதானம். மனிதனைத் தவிர பிற உயிரினங்கள் தங்களின் இருப்பிற்காக, வாழ்விற்காக, உணவுக்காக தங்களின் உழைப்பு ஆற்றலைப் பயன்படுத்துகின்றன. ஆனால், மனிதர்கள் மட்டும்தான் ஆற்றல்களை வசதிக்காவும், ஆடம்பரத்திற்காகவும் வரைமுறையின்றிப் பயன்படுத்துகின்றனர்.

கட்டுக்கடங்காத இந்த நுகர்வு வெறி, இயற்கையைச் சுரண்டி வாழும் மோசமான வாழ்க்கை முறைக்கு வித்திடுகிறது. புதைபடிம எரிபொருள் இன்னும் சில ஆண்டுகளில் தீர்ந்து விடக்கூடும் என்ற நிலையில், மாற்று ஆற்றல் குறித்த சிந்தனையை உலக நாடுகள் முடுக்கி விட்டுள்ளன.

புதைபடிம எரிபொருள், மரக்கட்டைகள், விறகு, நீர்,, அணு உள்ளிட்டவைகளால் கிடைப்பது மரபு சார் ஆற்றல்களாகவும் சூரியன், காற்றாலை, கடல் அலை, புவிவெப்பம், உயிரியல் வாயு, உயிரியல் எரிபொருள் ஆற்றல் போன்றவை மரபுசாரா ஆற்றல்களகவும் வகைப்படுத்தப்படுகின்றன.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தும் வண்ணம் மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதும் அவசியம். அதே நேரம்,புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம்.


சுற்றுச்சூழல் சீர்கேடு, உலகம் வெப்பமயமாதல் ஆகியவை நம்முன் மிகப்பெரிய பிரச்னையாக உள்ளன. பூமியை சுற்றுச்சூழல் மாசு அடைவதில் இருந்து காப்பாற்றுவதற்கு பிற நாடுகளை வழிநடத்தும் விதமாக தற்போது பாரதம் செயல்பட ஆரம்பித்துள்ளது.

உலகின் ஒட்டு மொத்த மின் தேவை சராசரியாக 18 டெராவாட். சரிவர திட்டமிட்டு காற்றாலை சுழலிகளை நிறுவினால் இத்தேவையை விட நான்கு மடங்கு அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

நமது மத்திய அரசின் முயற்சியால் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் உற்பத்தித்திறன் தற்போது சுமார் 100 ஜிகாவட்டாக உயர்ந்து வருகிறது.

தமிழகம் அதிக அளவு காற்றாலை மின் உற்பத்தி செய்யும் மாநிலம். அதிக அளவிலான காற்றாலைகள் நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன.

# உலகக் கொசு தினம்



விஜயபாரதம்

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 20ம் தேதி எல்லா நாடுகளிலும் உலகக் கொசு தினம் அனுசரிக்கப்படுகிறது. 1897ல் டாக்டர் ரொனால்டு ராஸ் செய்த முக்கியமான கண்டுபிடிப்பைக் குறிக்கவே இது கொண்டாடப்படுகிறது. பெண்ணின அனபெலஸ் குலிசிஃபேசிஸ் கொசுக்கள்தான், மனிதர்களுக்கு மலேரியா ஒட்டுண்ணிகளைப் பரப்புகின்றன என்பதை அவர் கண்டுபிடித்தார்.

உலகில் மிக ஆபத்தான விலங்குகளில் கொசுவும் ஒன்று என்றால் நம்ப முடிகிறதா? ஆம், நோய்களை எடுத்துச் சென்று மனிதர்களுக்கு இடையில் பரப்பும் கொசுக்களால் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான மரணங்கள் நிகழ்கின்றன. இதில், பலவகையான நோய்களைப் பரப்பும் பல்வேறு கொசுக்கள் உள்ளன.

உதாரணமாக, ஏடிஸ் ஈஜிப்தி வகை கொசு சிக்கன்குனியா, டெங்கு, யானைக்கால் நோய், பிளவு பள்ளத்தாக்குக் காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல், சிக்கா போன்ற நோய்களை மக்களிடம் கொண்டு சேர்க்கிறது என்றால், அனபெலெஸ் வகை கொசுவோ மலேரியா, யானைக்கால் நோய் (ஆப்பிரிக்காவில்) பரப்புகிறது. கியூலெக்ஸ் வகை கொசு ஜப்பானிய மூளைக் காய்ச்சல், யானைக்கால் நோய், மேற்கு நைல் காய்ச்சல் உள்ளிட்டவற்றை ஏற்படுத்துகிறது.

மலேரியாவும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல்களும் கொசுக்களாலேயே ஏற்படுகின்றன. ஆனால், மலேரியாவை பரப்பும் அனபெலஸ் வகை கொசு இரவில் கடிக்கும். டெங்கு உள்ளிட்ட நோய்களை பரப்பும் ஏடிஸ் வகை கொசு பட்டப்பகலில் நாம் விழித்திருக்கும்போதே கடிக்கும் என்பதுதான் இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு. கொசு வலைகள், கொசுவர்த்திகள் போன்றவை இரவில் நம்மை கொசுக்கடியிலிருந்து பாதுகாக்கும். ஆனால், டெங்கு?

இந்தவகை கொசுக்களிடமிருந்து தப்பிக்கவும், தவிர்க்கவும் சில வழிகள் உண்டு. முழுக்கை சட்டை அணிவது, கொசு கடிக்காமல் இருக்க தேங்காய் எண்ணை, அதற்காக மருந்து கடைகளில் விற்கும் களிம்புகளை தடவிக்கொள்வது போன்றவை இதனை ஓரளவு தடுக்கும் என்றாலும், கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அழிப்பது ஒன்றே இதற்கு நல்ல தீர்வாக அமையும். வீட்டைச் சுற்றித் தேங்கியிருக்கும் தண்ணீரை அகற்றுவது, வாளிகள், டயர்கள் போன்றவற்றில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்வது போன்றவை கொசு உற்பத்தியைப் பெருமளவு தடுக்க உதவும்.

பெண் கொசுக்களுக்கே இரத்தம் தேவைப்படுகிறது. ஆண் கொசுக்கள் பூந்தேன் அல்லது பொருத்தமான சர்க்கரை ஆதாரங்களால் உயிர் வாழ்கின்றன என்பது கூடுதல் தகவல்.

# வரலட்சுமி விரதம்



விஜயபாரதம்

அம்பாளைக் கொண்டாடக் கூடிய மாதம் ஆடி மாதம். மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று மகாவிஷ்ணு அருளினார். அதேபோல், 'மாதங்களில் நான் ஆடி' என்கிறாள் மகாசக்தி. அப்பேர்ப்பட்ட ஆடி மாதத்தில் வரும் மிக முக்கியமான பண்டிகை வரலட்சுமி விரதம்.

பெண்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கும் ஹிந்து தர்மத்தில், சுமங்கலிப் பெண்கள் சேர்ந்து செய்யும் விசேஷ பூஜைகளில் ஒன்றுதான் வரலட்சுமி விரதம். நம்முடைய ஹிந்து தர்மத்தின் ஆணிவேர்களாகத் திகழ்பவர்கள் பெண்கள். ஒரு வீட்டில் நடைபெறும் நல்ல காரியங்களுக்கு நாள் குறிக்க வேண்டும் என்றால், கிரகலட்சுமியாக இருக்கும் அந்த வீட்டுப் பெண்ணின் நட்சத்திரத்தை வைத்துத்தான் நாள் குறிக்க வேண்டும்.

வேண்டும் வரத்தை அருள்பவள் வரலட்சுமி. அஷ்டலட்சுமிகளின் ஐக்கிய ஸ்வரூபமே வரலட்சுமியின் திருவடிவம். வரலட்சுமியை விரதமிருந்து பூஜித்தால், குடும்பம் குறைவின்றி சிறக்கும். கணவர் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் பெறுவார். குழந்தைகளுக்கு அனைத்து பேறுகளும் சித்திக்கும். நித்திய சுமங்கலியான மகாலட்சுமி பொறுமையே வடிவானவள், கணவரின் இதயத்தில் குடியிருக்கும் இவள், பெண்களை துன்பங்களில் இருந்து காப்பவள். அவ்வாறு பெண்களை காப்பதற்காகவே, இந்த வரலட்சுமி விரதத்தன்று தன்னை வழிபடும் பெண்களின் வீட்டிற்கு சென்று குடிகொள்கிறாள்.

முற்காலத்தில் மகத நாட்டின் குந்திணா என்ற கிராமத்தில் வசித்த சாருமதி என்ற பெண்ணின் கனவில் மகாலட்சுமி தோன்றி, வரலட்சுமி விரதத்தை அனுஷ்டிக்கும்படியும், அதன் பலனாக வேண்டிய அனைத்தையும் அருள்வதாகவும் கூறினாள். சாருமதியும் அந்தக் கனவைப் பற்றித் தன் கணவரிடமும், புகுந்த வீட்டினரிடமும் தெரிவித்தாள். அவர்களின் ஒத்துழைப்போடு கிராமத்தில் இருந்த மேலும் சில சுமங்கலிப் பெண்களும் வரலட்சுமி விரதத்தை அனுஷ்டித்தனர். அதனால் தாங்கள் வேண்டிய வரங்கள் அனைத்தையும் பெற்றனர் என்று வரலட்சுமி விரத மகாத்மியம் கூறுகிறது.

இந்த விரதத்தை ஆண்டுதோறும் கடைப்பிடித்துவந்தால் மனதில் எப்போதும் ஆனந்தம் நிலைத்திருக்கும். குறைவற்ற செல்வம், புத்திரபாக்கியம், ஆரோக்கியம், நினைத்தது நிறைவேறுதல் என அவரவர்க்கு ஏற்ப வரலட்சுமி வரமாக அருள்வாள். ஸ்ரீசூக்தம், மகாலட்சுமி அஷ்டகம் கனகதாரா ஸ்தோத்திரம் என்று நமக்குத் தெரிந்த ஸ்லோகங் களைப் பாராயணம் செய்யலாம்.